சங்கத்தின் முறைகேடுகளைக் களையவும், அச்சங்கம் சிறந்த அடிப்படையில் இயங்கச் செய்வதற்கும் திருச்சிராப்பள்ளி கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அச்சங்கத்தின் தனி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சம்பந்தப்பட்டவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இதுவரை எடுக்கப்படவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதைத்தான் நான் சொன்னேன். தவறுகள் என்ன என்ன நடந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து சார்ஜ் பண்ண ஸ்பெஷல் ஆபீசர் போடப்பட்டிருக்கிறார்கள். தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படும்.

தொழிலாளர் கல்வி நிலையங்கள்.

*507 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தொழிலாளர்கள் கல்வி திட்டத்தின் கீழ் 1972 வரை மத்திய அரசு தமிழகத்திற்கு எவ்வளவு தொகை அளித்துள்ளது?

(இ) இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் எத்தனை பிராந்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தப் பணிக்கு மத்திய அரசாங்கம் தொடர்ந்து உதவி செய்து வருகிறதா? நடப்பு ஆண்டுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கித் தந்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மத்திய அரசு தொடர்ந்து உதவி செய்து வருகிறது. 1972–73க்கு ரூ 6,21,276·33 மத்திய அரசு வழங்கியுள்ளது.

திரு. சு. துரைசாமி : இதனால் பயன்பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு? இந்தத் தொகையை இன்னும் அதிகமாக மத்திய அரசு தருவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 653-655ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பயன்பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 76,932.

திரு. கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசு 1957 ஆம் வருஷத்திலேயே இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து, மதுரை, கோவை, சென்னை ஆகியவற்றில் இந்த வகுப்புகளை நடத்திக்கொண்டிருக்கிறார்களே, தமிழ்நாடு சர்க்காரும் இம்மாதிரி வகுப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்களே, இது அவசியம் தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அந்தத் தொழிற் கல்வி பரவலாக நடைபெறவேண்டுமென்கிற நல்ல நோக்கத்தோடு, இந்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தொழிற் கல்வி வகுப்புகளுக்குச் செல்கின்ற தொழிலாளிகளுக்கு முதலாளிகள் சம்பளத்தோடு கூடிய லீவ் வழங்க வேண்டுமென்ற விதிமுறை இருக்கிறது. சில இடங்களில் முதலாளிகள், தொழிற் கல்வி வகுப்புக்களுக்குச் செல்கின்ற தொழிலாளிகளுக்கு விடுமுறை கொடுத்து, அவர்கள் அட்டெண்ட் பண்ணுகிற நாட்களுக்கு ஊதியம் கொடுப்பதில்லை. அதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அப்படிப்பட்ட குறைபாடுகள் பற்றி என்னிடத்திலே எந்தவிதமான புகாரும் மனுவாக வந்து சேரவில்லை. அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமானால் அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த பிராந்திய வகுப்புகளில் என்ன என்ன வகையான பாடங்கள் போதிக்கப்படுகின்றன? இந்தப் பாடங்கள் எவ்வளவு நேரம் போதிக்கப்படுகின்றன என்றும் அறியலாமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, பல்வேறு வகையான பயிற்சிகள் 3 மட்டங்களில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பணிபுரிபவர்களிலிருந்து போட்டித் தேர்வுகள் நடத்துவதன் மூலம், கல்வி அதிகாரிகளைத் தெரிந்தெடுப்பதும், சம்பந்தப்பட்ட வட்டார நிலையங்களில் தொழிற்சங்கங்களால் தொழிலாளர்களுக்கிடையே இருந்து அனுப்பப்படும் தொழிலாளர்—ஆசிரியர்களுக்கு கல்வி அதிகாரிகள் பயிற்சி அளிப்பதும், பகுதிநேர தொழிற்சாலை வகுப்பு நடத்துவதுமான 3 வகைப்பட்ட காரியங்கள் இதிலே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1974 மார்ச் 19]

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கணக்குப் பிரகாரம், தமிழ் நாட்டிலே அதிகப்படியான தொழிலாளிகள் இருக்கும் பகுதியான கோயம்புத்தூரிலே செலவிடுகிற தொகை குறைவாகவும், மற்ற மதுரை போன்ற இடங்களிலே அதிகமாகவும் இருக்கும் காரணத்தாலே, கோவை தொழிலாளர்கள் அதிகப் பயன் அடைவதற்கு அரசாங்கம் ஏதாவது முன்முயற்சி எடுத்துக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, மதுரை, திருநெல்வேலி, குலசேகரம் ஆகிய இடங்களிலே கிளைகள் இருக்கின்றன. கோயம்புத்தூரிலே குன்னூர், பொள்ளாச்சி ஆகிய இரண்டு இடங்களிலே கிளைகள் இருக்கின்றன. செலவைத்தான் பரிமாறிக்கொள்கிறோமே தவிர ஏற்படுகிற செலவை நாங்கள் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

Slum Clearance Schemes.

*508 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the activities of the Slum Clearance Board is to be revised to prevent rise in price of the lands in the City of Madras ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : முதலிலே, அரசாங்கப் புறம்போக்கு, கார்ப்பரேஷன் இவர்களிடம் இருக்கிற இடங்களை உடனடியாக எடுத்து ஸ்லம் கிளியர்ரன்ஸ் போர்டு அந்த வேலைகளைச் செய்ய ஆரம்பிக்குமானால், தனி நபர் நிலத்தை எடுத்து, அவர்கள் விலையை ஏற்றுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கும். அப்படிப்பட்ட முறைகளை வகுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தனியார் பகுதியிலே கட்டப்பட்டிருக்கிற குடிசையிலே உள்ள நிலங்களைத் தனியார் தாங்களே தந்துவிட முன் வருகிறார்கள். ஏனென்றால், இப்பொழுது நிலவரி போன்றவைகள் ஏராளமாக இருக்கின்றன. இதனால் விட்டுவிட முன்வருகிறார்கள். ஆகவே, அவர்களாகவே விட்டுவிட முன்வருவதை பெறுவதிலே அரசாங்கம் தயக்கம் காட்டவேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் மட்டுமல்ல, சாதாரண கிராமங்களிலிருக்கிற வீட்டு மனைகள்கூட, ரூ. 1,000 விற்றது இன்றையதினம் ரூ. 1 இலட்சத்துக்கு விற்கப்படுகிறது. அவைகளை எல்லாம், இந்த அளவுதான் விற்க வேண்டுமென்று, கட்டுப்படுத்த செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.